**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 12** |
| **Name** | : | **திரு. சார்லஸ்** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.02.2024**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் காவல் கூடுதல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். மதுரை மாவட்டம் பேரையூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றிய போது, மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். 58/C/SB/MD /2017 நாள் 11.01.2017 உத்தரவுப்படி 23.02.2017 ம் தேதியன்று உசிலம்பட்டி தாலுகா காவல்நிலைய குற்ற எண். 239/2016 பிரிவு 448, 294(b), 427, 323, 324, 506(1) இதச உடன் இணைந்த பிரிவு 4 of TNPHW Act வழக்கினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். புகார் ஏற்கனவே அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அதசாஆ. 8 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. **காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை அதசாஆ.11 ஆகும்.** அன்றைய தேதியில் கனம் உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு இவ்வழக்கில் நான் முதல் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட விபரத்தை எழுத்து மூலமாக தெரிவித்தேன். **அந்த அறிக்கை அதசாஆ.12 ஆகும்.** அன்றைய தினமே, சாட்சிகளை விசாரணை செய்ய சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பி வைத்தேன்.

24.02.2017 ம் தேதியன்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டும் சாட்சிகள் பேச்சியம்மாள், உமாராணி, பார்வதி, பூங்கொடி, இராஜேந்திரன், நல்லதம்பி ஆகியேரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.02.2017 ம் தேதி சம்பவ இடத்தை முன்னிட்டு புகைப்படங்கள் 7 எண்ணிக்கை எடுத்தேன். **அந்த 7 புகைப்படங்கள் அதசாஆ.13 ஆகும்.**(எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் சம்பவ இடத்தில் மகஜர் தயர் செய்து, நெளிந்து போன பாத்திரங்கள்-2,. உடைந்து போன பிளாஸ்டிக் வாளி ஆகியவற்றை சாட்சிகள் இராஜேந்திரன் மற்றும் நல்லதம்பி ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அந்த அத்தாட்சி அதசாஆ.14 ஆகும்.**

**நெளிந்துபோன பாத்திரங்கள்-2 அசாபொ.1 ஆகும்**

**உடைந்து போன பிளாஸ்டிக் வாளி-1 அசாபொ.2 ஆகும்.**

கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண். 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 95 அதசாஆ.15 ஆகும்.** 03.03.2017 ம் தேதியன்று எதிரி போஸ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

26.03.2017 ம் தேதியன்று சாட்சிகள் தமிழ்மணி, பாண்டி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே வழக்கின் சட்டப்பிரிவை 448, 294(b), 427, 323, 324, 506(1) இதச உடன் இணைந்த பிரிவு 4 of TNPHW Act ல் இருந்து பிரிவுகள் 448, 427, 323, 324 இதச ஐ நீக்கம் செய்து கூடுதலாக 447, 352 இதச மற்றும் பிரிவுகள் 3(1) TNPPDL Act சட்டப்பிரிவுகள் இணைத்து பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.16 ஆகும்.** 30.03.2017 ம் தேதியன்று உசிலம்பட்டி சார்பதிவாளர் அவர்களிடம் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் அதற்கு உண்டான வில்லங்க சான்றிதழையும், மற்ற ஆவணங்களையும் பெற்று சார்பதிவாளர் திரு.பாலமுருகன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஆவணங்கள் ஏற்கனவே அதசாஆ.4 முதல் 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 447, 294(b), 352, 506(1) இதச மற்றும் 3(1) TNPPDL Act மற்றும் பிரிவு 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

எனக்கு முன்பு விசாரணை செய்த காவல் சார்பு ஆய்வாளர் எத்தனை சாட்சிகளை விசாரணை செய்தார் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகளின் பெயர்கள் பேச்சி, பேச்சியம்மாள், அழகுத்தாய், பார்வதி, பூங்கொடி, பெரியாண்டி, அழகர்சாமி, உமாராணி, ராஜேந்திரன், நல்லதம்பி, ஆகும். மேற்படி 10 சாட்சிகளையும் சார்பு ஆய்வாளர் விசாரணை செய்துள்ளார் என்றால் அவரும் விசாரித்துள்ளார். நானும் விசாரணை செய்துள்ளேன்.

மேற்படி 10 சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை என்றும் அவர்களில் 5 சாட்சிகளை மட்டும் தான் நான் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரணை செய்யாமலேயே நான் பிரிவு 161 குவிமுச வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற அன்றே சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்திருந்ததை எனது விசாரணையின் போது பார்வையிட்டேன். 13.09.2016 ம் தேதி மேற்படி ஆவணங்களை சார்பு ஆய்வாளர் தயார் செய்துள்ளார் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் அவர்கள் தனது விசாரணையின்போது அசபொ.1, அசாபொ.2 ஆகியவற்றை கைப்பற்றியதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் சார்பு ஆய்வாளர் அசாபொ.1, அசாபொ.2 ஆகியவற்றைக் கைப்பற்றவில்லை. 27.02.2017 ம் தேதியன்று தான் நான் மேற்படி அசாபொ.1 மற்றும் அசாபொ.2 ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் 3 மாத காலதமத்திற்குப் பின்னர் சான்று பொருட்கள் அனைத்தும் கைப்பற்றியதாக சொல்லியது உண்மைக்குப் புறம்பானது என்றும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சான்று பொருட்கள் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் வாக்குமூலத்தில், எதிரி தான் வழக்கில் சம்பந்தப்பட்ட இடத்தில் விவசாயம் செய்து வந்ததாகவும், உமாராணி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக எதிரியை அவர் அனுபவம் செய்து வந்த இடத்தில் இருந்து வெளியேற்றுவதற்காக காவல்துறையை அனுகி அதன் மூலம் வெளியேற்ற முயற்சித்தார் என்றும் அது சம்பந்தமாக எதிரியானவர் உசிலம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பியுள்ளார் என்றும் எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் எந்த சாட்சிகளையும் விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சிகள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்திசெய்யப்பட்ட சாட்சிகள் என்றும் சொன்னால் சரியல்ல. சாட்சிகளிடம் இருந்து பெற்றப்பட்டதாகச் சொல்லப்படும் வாக்குமூலங்கள் அனைத்தும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இது சிவில் சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் அது சம்பந்தமாக அவர் மீது வழக்கு தொடர்வதற்கும் விசாரிப்பதற்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் இந்த வழக்கு எதிரி மீது பொய்யாகப் புனையப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அசா.4.உமாராணி என்பவர் 26.06.2012 ம் ஆண்டு உசிலம்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் புகார் அளித்து அந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அசா.4 உமாராணி அளித்த உசிலம்பட்டி தாலுகா காவல்நிலைய குற்ற எண். 163/2012 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் எதசாஆ.1 ஆகும்.**

**உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்ற RCS No. 202/2014 உத்தரவு சான்றிட்ட நகல் எதசாஆ.2 ஆகும்.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை